**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093650

1. District : நாமக்கல் PS: ல.ஒ.க.துறை Year: 2021 FIR No.: 02/AC/2021 Date: 25.03.2021
மாவட்டம் காவல்நிலையம் நாமக்கல் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: u/s 7(b)
(ii) Act சட்டம்: Act, 1988 as amended by P.C Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 1) 7.01.2021 - சுமார் 11.45 மணி. 2) 8.02.2021 க்கு பின் சுமார் 10 நாட்கள் கழித்து ஒரு நாள்.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to : 3) 22.03.2021- சுமார் 10.15 மணி மற்றும் சுமார் 12.30 மணி. 4) 23.03.2021- சுமார் 13.30 மணி.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம் 25.03.2021 - காலை சுமார்

(c) General Diary Reference : Entry No(s) Time : 08.00 மணி.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.03.2021 நேரம் 08.00 மணி.

4. Type of Information : Written/ Oral: Vol. I
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் கிராம நிர்வாக அலுவலர்
Beat Number : (b) Address : அலுவலகம், மாணத்தி கிராமம்,
முறைக் காவல் எண் முகவரி திருச்செங்கோடு தாலுக்கா.
சுமார் 14 கி.மீ. மேற்கு.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : N. குமாரன் (b) Father's/ Husband's Name : (லேட்) நடேசன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு வயது 72 நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் – வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : 1/55, மாணத்தி கிராமம்,
தொழில் — முகவரி திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி-வசந்தா, கிராம நிர்வாக அலுவலர், மாணத்தி கிராமம், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
சமர்ப்பிக்கப் படுகிறது.

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

25/3/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

25/03/2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 25.03.2021
09.30 மணி.

Name: பெயர் M. நல்லம்மாள்
Rank: நிலை ......................No. எண் .........
காவல் ஆய்வாளர்,
அ.ம.க. பிரிவு,
நாமக்கல்.

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/AC/2021 u/s 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

இன்று 25.03.2021-ஆம் தேதி வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்கா, மானத்தி அஞ்சல், கதவு எண்.1/55 என்ற முகவரியில் வசிக்கும் (லேட்) நடேசன் என்பவரின் மகன் திரு.N.சுகுமாரன் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து மூலமான புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல்: N.சுகுமாரன், த.பெ.(லேட்) நடேசன், 1/55, மானத்தி கிராமம், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். பெறுதல்: உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, நாமக்கல். ஐயா, நான் மானத்தி கிராமத்தில் எனது மனைவி மனோன்மணி உடன் வசித்து வருகிறேன். எனக்கு இரண்டு மகன்கள். இருவரும் திருமணம் செய்துகொண்டு வெளியூரில் வசித்து வருகிறார்கள். நான் ஒரு தனியார் ஸ்பின்னிங் மில்லில் ஸ்டோர் கீப்பராக வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டேன். எனக்கு வயது 72, எனது மனைவிக்கு வயது 68. எனது மனைவி கடந்த 13 வருடங்களாக மலக்குடல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு புற்றுநோயாளிக்கான அரசின் உதவித்தொகையாக மாதம் ரூ.1,000/- பெற்று வருகிறார். எனக்கும் வயதாகிவிட்டதால் வேலைக்கு எதுவும் செல்லமுடியாததால் அரசின் முதியோர் உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க திருச்செங்கோடு தாலுக்கா அலுவலகம் சென்று விபரம் கேட்டு, நான் முதியோர் உதவித்தொகை பெறத் தகுதியுடையவன் என்று தெரிந்து நாமக்கல் ஆட்சியர் அலுவலக இ-சேவை மையத்தில் கடந்த 05.01.2021 அன்று முதியோர் உதவித்தொகை பெற விண்ணப்பித்தேன். இ-சேவை மையத்தில் இருந்த நபர் என்னை எங்களது கிராம வி.ஏ.ஓ. அவர்களை சென்று பார்க்கும்படி கூறினார். ஆகையால் நான் 07.01.2021 அன்று காலை சுமார் 11.45 மணிக்கு மானத்தி கிராம நிர்வாக அலுவலகம் சென்று வி.ஏ.ஓ. திருமதி.வசந்தா அவர்களை பார்த்து நான் முதியோர் உதவித்தொகைக்கு விண்ணப்பித்துள்ளது குறித்து சொன்னேன். அவர் ஆன்லைனில் என்னுடைய மனு

விசாரணைக்கு வந்துள்ளதாக தெரிவித்து என்னுடைய மனுவை சிபாரிசு செய்ய ரூ.3,000/- செலவாகும் என்று சொன்னார். நான் தற்பொழுது என்னிடம் பணம் இல்லை என்றும் எனக்கு உதவித்தொகை பெற ஏற்பாடு செய்து கொடுங்கள், பின் எனக்கு வேலை செய்த இடத்தில் பணம் கொஞ்சம் வரவேண்டியிருக்கிறது அது வந்தவுடன் பார்க்கலாம் என்று சொன்னேன். அவர் சரி நான் பார்த்துகிறேன், ஆனால் பணத்தை விரைவில் ஏற்பாடு செய்து கொண்டுவந்து கொடுத்துவிடவேண்டும் என்று சொன்னார். அதன்பின் நான் வி.ஏ.ஓ. வை சென்று பார்க்கவில்லை. பின் கடந்த 6.02.2021 அன்று எனது மனுவின் மீது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக எனக்கு எனது செல்போனில் மெசேஜ் வந்தது. பின் நான் 8.2.2021 ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலக இ.சேவை மையத்திற்கு சென்று எனக்கு வந்திருந்த மெசேஜை காண்பித்து எனது மனுவின் மீது திருச்செங்கோடு தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புதிட்டம்) அவர்கள் போட்டிருந்த உத்தரவு நகலை பெற்றுக்கொண்டேன். பின் சுமார் 10 நாட்கள் கழித்து என்னை வழியில் பார்த்த வி.ஏ.ஓ. அவரது அலுவலகம் வரச்சொன்னார். நான் அவரது அலுவலகம் சென்றபோது நான் கேட்ட பணம் என்னாச்சு, உங்களுக்குத்தான் உத்தரவு போட்டச்சே, ஏன் வந்து என்னை பார்க்கவில்லை என்று கேட்டார். நான் கையில் பணம் இல்லை என்று சொன்னேன். அதெல்லாம் காரணம் சொல்லாதீங்க சீக்கிரம் ரூ.3,000/-த்தை கொண்டு வந்து கொடுங்க என்று சொன்னார். பின் கடந்த 02.03.2021 அன்று எனது முதியோர் உதவித்தொகை ரூ.1,000/- எனது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டது. எனக்கு வி.ஏ.ஓ.க்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால் அவரை சென்று பார்க்கவில்லை. அதன் பின் 22.03.2021 காலை சுமார் 10.00 மணியளவில் நான் ரேசன் கடைக்கு டீ தூள் வாங்குவதற்கு போனேன். அப்போது அவரது அலுவலகத்தில் இருந்து என்னை கவனித்த வி.ஏ.ஓ. திருமதி.வசந்தா அங்கு அருகில் கோவிலில் பந்தல் போட்டுக்கொண்டிருந்த ஒரு பையன் என்னிடம் வந்து வி.ஏ.ஓ. அம்மா கூப்பிடுவதாக சொன்னார். நான் ரேசன் கடைக்கு சென்று டீ தூள் வாங்கிக்கொண்டு சுமார் 10.15 மணிக்கு வி.ஏ.ஓ. அலுவலகம் சென்று அவரை பார்த்தேன். அப்போது என்ன ஆச்சு உங்களுக்கு ஒரு மாச பணமே வந்திடுச்சு இன்னும் நான் கேட்ட பணத்தை கொடுக்கல என்று சொன்னார். நான் பணம் கொஞ்சம் பேங்கில் இருந்து வரவேண்டியிருக்கிறது வந்தவுடன் பார்க்கலாம் மேடம் என்று சொன்னேன். அதற்குள் வேறு நபர்கள் வந்ததால் என்னை மதியம் வாங்க என்று சொன்னார். நான் மீண்டும் மதியம் சுமார் 2.30 மணிக்கு வி.ஏ.ஓ. அலுவலகம் சென்று

வி.ஏ.ஓ. திருமதி.வசந்தா அவர்களை பார்த்தேன். அப்போது அவர் உங்களுக்குத்தான் OAP பணத்தை ஏத்திட்டாங்களே, யாரு எலக்சனில் ஜெயிச்சாலும் அதிகம்தான், அவங்க வந்தா ரூ.1,500/-, இவங்க வந்தா ரூ.2,000/- எப்படினாலும் பணம் அதிகமாயிடுச்சு அதனால் நீங்க எனக்கு ரூ.5,000/- ஆக கொடுத்திடுங்க என்று கேட்டார். மேலும் கொடுக்கலைனா ரெகமன்ட் பண்ணின எனக்கு கேன்சல் பண்ணத்தெரியாதா? உங்க உத்தரவிலேயே கன்டிசன் எல்லாம் போட்டிருக்குமே பார்க்கலையா என்றும் சொன்னார். மேலும் இப்ப எவ்வளவு வைத்துள்ளீர்கள் கொடுத்துட்டு போங்க என்று கட்டாய படுத்தியதால் நான் வீட்டு செலவிற்காக வைத்திருந்த பணம் ரூ.1,000/-ஐ எடுத்து கொடுத்துவிட்டு வந்தேன். மீதி பணம் ரூ.4,000/-ஐ நாளைக்கு கொண்டுவந்து கொடுத்துவிட வேண்டும் என்றும் இல்லைனா சொன்னமாதிரி கேன்சல் செய்ய மெசேஜ் போட்டுவிடுவேன் என்று சொன்னார். அதனால் அடுத்தநாள் 23.03.2021-ஆம் தேதி பகல் சுமார் 1.20 மணிக்கு வி.ஏ.ஓ. அலுவலகம் சென்றேன். அப்போது அங்கு எங்க ஊர் பஞ்சாயத்து கிளர்க்கும் பஞ்சாயத்து தூய்மை பணியாளர் ஒருவரும் இருந்தனர். என்னை பார்த்தவுடன் பஞ்சாயத்து கிளார்க் என்னிடம் பேசினார். பின் நான் வி.ஏ.ஓ. விடம் ஒரு சின்ன ரிகொஸ்ட் மா என்று சொன்னவுடன் அவர் சைகையில் அவர்களை வெளியில் இருக்க கேட்டுக்கொண்டார். அவர்கள் வெளியில் சென்றுவிட்டனர். நான் வி..ஏ.ஓ.விடம் என்னிடம் கேட்ட பணத்தில் ரூ.1,000/-மாவது குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டேன். அவர் நான் செஞ்சு கொடுத்துட்டுதானே கேட்கிறேன். பேரம் பேசவில்லை என்று சொன்னார். நான் கொடுத்திடுறேன். நீங்க நேத்து சொன்னமாதிரி கேன்சல் எதுவும் பண்ணிடாதீங்க என்று கேட்டுக் கொண்டேன். மேலும் நான் ஏற்கனவே ரூ.3,000/-ம் தான் சொன்னீங்க என்று சொன்னேன். அதற்கு அவர் அந்த பணத்துக்கு தாலுக்கா ஆபீசில் வேலை ஆகவில்லை. நான் வாங்கி கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லித்தான் உங்களுக்கு சேங்சன் ஆச்சு, உங்களுக்கு வேலை செஞ்சு கொடுத்துட்டுதானே கேட்கிறேன், உங்ககிட்ட பேரம் பேசறது கிடையாது என்று சொன்னார். நான் பணம் ரெடியானதும் வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நான் 23.03.2021-ம் தேதி வி.ஏ.ஓ. திருமதி.வசந்தா அவர்களை சந்தித்த போது பேசிய விபரங்களை எனது **Oppo A53** மாடல் செல்போனில் உரையாடல் பதிவு செயலியில் பதிவு செய்து எடுத்து வந்துள்ளேன். மானத்தி கிராம வி.ஏ.ஓ. திருமதி.வசந்தா அவர்கள் எனக்கு முதியோர் உதவித்தொகை பெற ரெகமன்ட் செய்ததற்காக லஞ்சமாக கேட்ட பணம் ரூ.4,000/- உடன் நான் அவரை சந்திக்க

உள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்கும் மானத்தி வி.ஏ.ஒ. திருமதி.வசந்தா அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd/-xxxxx) 25/3/21.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று படித்துப்பார்த்தும், புகார்தாரர் ஆஜர் செய்த செல்போனிலிருந்து புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையே 23.03.2021-ம் தேதி நடந்த உரையாடலை அந்த செல்போனில் ஒலிக்கச் செய்து கேட்டுப் பார்த்தும், புகாரின் உண்மைத் தன்மை குறித்தும், புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 25.03.2021-ஆம் தேதி காலை 08.45 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.2/AC/2021, u/s 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு அசல், புகார்தாரர் ஆஜர் செய்த செல்போனிலிருந்து புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையே 23.03.2021-ம் தேதி நடந்த உரையாடல் அலுவலக மடிக்கணினியில் பதிவிறக்கம் செய்து, பதிவேற்றம் செய்யப்பட்ட குறுந்தகடு ஒன்று மற்றும் இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 65(B) (2)(d)-ன்படியான சான்றறிக்கை ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனிநீதிபதி, நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

(M. நல்லம்மாள்) 25/03/2021
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.